YISHUN SECONDARY SCHOOL
Subject :Tamil (1157)
Level & Stream: Sec 2 Express (Higher Mother Tongue)

| The Curriculum and Approaches to Learning | Key Programmes / Competitions |
|---|---|
| தமிழ்மொழிப் புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்கள் அடிப்படை மொழிதிறன்களை பெற தமிழ்மொழிக் கற்பித்தலில் பல்வேறு உத்திகளையும், கற்றல் பயிற்று வளங்களையும், ஊடகங்களையும் மாணவர்களின் வயது மற்றும் அனுபவத்திற்கேற்ப வழங்கி மகிழ்வூட்டும் கற்றலை வழங்குதல். மாணவர்களின் ஆர்வ நிலையைத் தூண்டவும் அவர்களின் ஆற்றலை வளப்படுத்தவும் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைப் பற்றிய தகவல்களைத் தகவல் தொழில்நுட்பத்தோடு இணைத்து தமிழ்மொழி கற்றலை வழங்குதல். | பொங்கல் விழா, இரு வார தமிழ்மொழி விழா, தமிழ்மொழி முகாம்,வாசிப்புப் பயிற்சித்திட்டம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகப் போட்டிகள், தமிழ்மொழி மாதப் போட்டிகள் மற்றும் கற்றல் பயணங்கள். |

| Term / Week | Learning Experiences (chapter, activity) | Learning Outcomes & Assessment |
|---|---|---|
| 1 | **<u>படித்தல்:</u>**<br><br>எது நட்பு?, வரலாற்றில் நிற்கும் உன்னத நட்பு, நட்பு தினம், நினைவலைகள்,<br><br>புத்துணர்ச்சி அளிக்கும் பொழுதுபோக்கு, அச்சுப் படைப்புகள், ஞாபகம் வருதே ஆகிய தலைப்புகளில் அமைந்த பனுவல்களைப் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br>சுருக்கி வரைதல் பயிற்சியில் ஈடுபடுவர். சிறுகதைக் கூறுகளை நினைவுகூர்ந்து எண்ணங்கள் நிலையானவை அல்ல என்ற சிறுகதையைத் திறனாய்வர். பொழுதுபோக்கில் நாங்கள் பெற்ற பயன்கள் என்ற தலைப்பில் நாளேட்டுச் செய்தியை எழுதுவர்.<br><br>ஒளிக்காட்சி பதிவு தயாரிப்பர் | பனுவலில் இடம்பெறும் தகவலுக்கு ஏற்றவாறு உணர்வுகளை வெளிப்படுத்திப் படிப்பர்.<br><br>பனுவலில் கூறப்பட்டுள்ள கருத்துகளைப் புரிந்துகொண்டு கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமாக விடையளிப்பர்.<br><br>நாளேட்டுச் செய்திப் பனுவலை உருவாக்கும் திறனைப் பெறுவர். நாளேட்டில் இடம்பெற்றிருக்கும் பல்வேறு கூறுகளைப்பற்றி அறிந்துகொள்வர்.<br><br>உறவு மின்னஞ்சல் – 20 மதிப்பெண்கள் |

| | | |
|---|---|---|
| | **<u>இலக்கணம்:</u>**<br>இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி<br>முற்றியலுகரம் & குற்றியலுகரம்<br>எண்ணுப்பெயர் & திசைப்பெயர்ப் புணர்ச்சி<br><br>**<u>இலக்கியம்:</u>**<br>கவிதையைப்பற்றியும், மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகிய இரண்டைப்பற்றியும் அறிவர்.<br>மரபுத்தொடர்கள், இணைமொழிகள், பழமொழி, திருக்குறள்<br><br>**<u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u>**<br>ஒருவர் பொறை இருவர் நட்பு, பொழுதுபோக்குகள் பலவிதம் ஆகிய பகுதிகளைக் கேட்பர். | இலக்கணக்கூறுகளை அறிந்து கொள்வர்; பயிற்சிகளைச் செய்து புரிந்துணர்வை வெளிப்படுத்துவர். வாக்கிய அமைப்பில் சரியாகப் பயன்படுத்த அறிந்துகொள்வர்.<br><br>கவிதை என்னும் இலக்கிய வகைபற்றித் தெரிந்துகொள்வர். வாக்கிய அமைப்பில் புரிந்துகொள்வர், பயன்படுத்த அறிந்துகொள்வர்<br><br>ஒலிப்பகுதியைக் கவனமாகக் கேட்டு வினாக்களுக்கு விடையளிப்பர். |
| 2 | **<u>படித்தல்:</u>**<br>இயற்கை அழகைக் காப்போம், சிங்கப்பூரின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கடல் மாசினைத் தடுப்போம், மன்னர்களும் மக்கள் நலனும், மன்னர்களின் போர் நெறிமுறைகள், தமிழ் வளர்த்த அரசர்கள் ஆகிய தலைப்புகளில் அமைந்த பனுவல்களைப் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br>சமூகத் தோட்டம் அமைத்தல்பற்றிய அலுவல் சார்ந்த மின்னஞ்சலும், நோய்க்கிருமிப் பரவல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான சுற்றறிக்கையையும் வடிவமைத்து எழுதுவர்.<br><br>**<u>இலக்கணம்:</u>**<br>உடன்பாட்டு, எதிர்மறை வினைமுற்று<br>பெயரெச்சம், வினையெச்சம்<br>தெரிநிலை, குறிப்பு வினைமுற்று<br>குறிப்புப் பெயரெச்சம், குறிப்பு வினையெச்சம்<br><br>**<u>இலக்கியம்:</u>**<br>கவிதையைப்பற்றியும், மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகிய இரண்டைப்பற்றியும் அறிவர்.<br>மரபுத்தொடர்கள், இணைமொழிகள் | முக்கியச் சொற்கள், சொற்றொடர்கள், பனுவலின் மையக்கருத்தைக் கண்டறிந்து பகுதியைப் புரிந்துகொள்வர்.<br><br>எழுதுவதற்குரிய நோக்கமறிந்து பொருத்தமான கருத்துகளைத் தெளிவாக எழுதுவர். கொடுக்கப்பட்டிருக்கும் சூழலுக்கேற்ப எழுதுவர்.<br><br>இலக்கணக்கூறுகளை அறிந்து கொள்வர்; பயிற்சிகளைச் செய்து புரிந்துணர்வை வெளிப்படுத்துவர். வாக்கிய அமைப்பில் சரியாகப் பயன்படுத்த அறிந்துகொள்வர்.<br><br>கவிதை என்னும் இலக்கிய வகைபற்றித் தெரிந்துகொள்வர். வாக்கிய அமைப்பில் |

| | | |
|---|---|---|
| | பழமொழி, திருக்குறள்<br><br>**<u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u>**<br>இது முடிவன்று, இதுவே தொடக்கம்!, கவரி வீசிய காவலன் என்ற நோக்கல் கருத்தறிதலைப் பார்ப்பர். | புரிந்துகொள்வர், பயன்படுத்த அறிந்துகொள்வர்<br><br>ஒளிக்காட்சியைக் கவனமாகப் பார்த்துக் கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளிப்பர். |
| 3 | **<u>படித்தல்:</u>**<br>அறிவியலும் தொழில்நுட்பமும் என்ற தலைப்பில்; எதிர்கால மாற்றங்கள், கைதொலைபேசியின் பங்கு பற்றியும் வாழ்க்கைத் திறன்கள் – சேமிப்பு மற்றும் அளவான செலவு ஆகிய தலைப்புகளில் அமைந்த பனுவல்களைப் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br>சமூகத் தோட்டம் அமைத்தல்பற்றிய அலுவல் சார்ந்த மின்னஞ்சலும், நோய்க்கிருமிப் பரவல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான சுற்றறிக்கையையும் வடிவமைத்து எழுதுவர்.<br><br>**<u>இலக்கணம்:</u>**<br>தனி வாக்கியம், கூட்டு வாக்கியம், கலவை வாக்கியம் ஆகிய வாக்கிய வகைகள் பற்றி அறிந்துகொள்வர்.<br><br>**<u>இலக்கியம்:</u>**<br>கவிதையின் உறுப்புகளுள் ஒன்றான அடிகள் பற்றி அறிவர். அவற்றின் பல்வேறு வகைகளைப்பற்றித் தெரிந்துகொள்வர். மரபுத்தொடர்கள், இணைமொழிகள் பழமொழி, திருக்குறள் ஆகியவற்றையும் அறிந்துகொள்வர்.<br><br>**<u>கேட்டல்\நோக்கல் மற்றும் பேசுதல்:</u>**<br>சிந்தித்துச் செயல்படு என்ற நோக்கல் கருத்தறிதலைப் பார்ப்பர். | முக்கியச் சொற்கள், சொற்றொடர்கள், தலைப்புகள் முதலியவற்றைக் கொண்டு பனுவலின் சாரத்தைப் புரிந்துகொண்டு பனுவலில் மையக்கருத்தைக் கண்டறிய படிப்பர்.<br><br>எழுதுவதற்குரிய நோக்கமறிந்து பொருத்தமான கருத்துகளைத் தெளிவாக எழுதுவர். கொடுக்கப்பட்டிருக்கும் சூழலுக்கேற்ப எழுதுவர். (கட்டுரை\மின்னஞ்சல்)<br><br>இலக்கணக்கூறுகளை அறிந்து கொண்டு; பயிற்சிகளைச் செய்து புரிந்துணர்வை வெளிப்படுத்துவர். வாக்கிய அமைப்பில் சரியாகப் பயன்படுத்த அறிந்துகொள்வர்.<br><br>கவிதை அடிகளின் வகைகைகைப் பற்றித் தெரிந்துகொள்வர். வாக்கிய அமைப்பில் புரிந்துகொள்வர், பயன்படுத்த அறிந்துகொள்வர்<br><br>ஒளிக்காட்சியைக் கவனமாகப் பார்த்துக் கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளிப்பர். |

| | | |
|---|---|---|
| 4 | **<u>படித்தல்:</u>**<br>சாமூகமும் நாடும் என்ற தலைப்பில் அமைந்த பனுவல்களைப் படிப்பர். | முக்கியச் சொற்கள், சொற்றொடர்கள், தலைப்புகள் முதலியவற்றைக் கொண்டு பனுவலின் சாரத்தைப் புரிந்து கொண்டு பனுவலில் மையக் கருத்தைக் கண்டறிந்து படிப்பர். |
| | **<u>எழுதுதல்:</u>**<br>சுருக்கி வரைதல் – மாணவர்கள் ஜேன் ஆடம்ஸ் பற்றிய பனுவல் | சுருக்கி எழுதுவதற்குரிய நோக்கமறிந்து பொருத்தமான கருத்துகளைத் தெளிவாக எழுதுவர். |
| | **<u>இலக்கணம்:</u>**<br>தொகுதிப்பெயரைப் பற்றி அறிந்துகொள்வர். | தொகுதிப்பெயரைப் பற்றி அறிந்துகொண்டு; பயிற்சிகளைச் செய்து புரிந்துணர்வை வெளிப்படுத்துவர். |
| | **<u>இலக்கியம்:</u>**<br>கவிதைக்கூறுகளுள் ஒன்றான தொடை என்பதைப் பற்றி அறிவர்.<br>மரபுத்தொடர்கள், இணைமொழிகள் பழமொழி, திருக்குறள் ஆகியவற்றையும் அறிந்துகொள்வர். | கவிதை தொடை பற்றித் தெரிந்துகொள்வர். வாக்கிய அமைப்பில் புரிந்துகொள்வர், பயன்படுத்த அறிந்துகொள்வர் |
| | **<u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u>**<br><br>கைகொடுப்போம் என்ற கேட்டல் கருத்தறிதலைக் கேட்பர். | ஒலிக்காட்சியைக் கவனமாகக் கேட்டுக் கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளிப்பர். |